நீர்த்தேக்கத்தில் ஜூன் 1 ஆம் நாளன்று குறைந்த அளவு 500 மில்லியன் கன அடி நீர் தேக்கி வைத்திருக்கப்பட வேண்டும்

2. பாபநாசம் நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்க எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு, நீர்த்தேக்கத்தில் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, கோடை காலத்தில் வரும் நீரின் அளவு, மீண்டும் பெறக்கூடிய நீரின் அளவு, ஏரிகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு, கடைக்கோடிப் பகுதிகளுக்கு வரும் நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத மத்தியில் முன் கார் சாகுபடிக்கான பரப்பு வரையறுக்கப்பட வேண்டும்.

முன் கார் சாகுபடிக்காக நீர் அனுமதிக்கும்போது கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் :--

(i) இருக்கக்கூடிய நீர் 8,124 எக்கருக்கும் குறைவான பரப்பளவிற்கு ('A' வகை நிலங்கள்) மட்டுமே பாசனமளிக்கப் போதுமானதாயிருந்தால் கால்வாயில் நீர் விடுவதற்கும் கால்வாயைப் பராமரித்து வருவதற்கும் உள்ள வசதிக்கேற்பவும், சிக்கனமாக நீரைப் பயன்படுத்துவதற்கேற்றவாறும் தெற்குத் தலைக் கால்வாய்க்கும் வடக்குத் தலைக் கால்வாய்க்குமிடையே உள்ள பகுதியில் முன் கார் பயிருக்காக நீர் விடப்படும்;

(ii) 10,000 எக்கர் 'A' வகை நிலங்களுக்குப் பாசனமளிக்க நீர் இருந்தால், [illegible] கால்வாயிலிருந்து நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும் (உயர் மட்ட மதகுகள் நீங்கலாக) வடக்கு தலைக் கால்வாயிலிருந்து கடம்பா ஏரி வரை நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும், கீழ்ப்பிடாகை அணைக்கட்டின் கீழ்ப்பகுதியில் ஸ்ரீவைகுண்டம் வடக்குத் தலைக் கால்வாயின் 11 ஆம் எண் மதகின் கீழ்ப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுக்கும் நீர் வழங்கப்படும்;

(iii) 10,000 எக்கருக்கு மேற்பட்ட பரப்பின் முன் கார் பயிருக்காகப் பாசனமளிக்க நீர் இருந்தால், மேலே (i), (ii) இனங்களின் கீழ்க் குறிப்பிட்ட பகுதிகளோடு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக் கால்வாய்களின் கீழ்ப் பகுதியிலுள்ள பரப்பையும் பாசனத்திற்காக நிர்வாகப் பொறியாளர் தெரிந்தெடுப்பார். ஆனால், அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் பகுதிகளில் குறைந்த அளவு நீரே வீணாவதாக இருக்க வேண்டியதுடன், பாசனம் பெறுவதற்குத் தொழில் நுட்ப முறையில் மிகவும் வசதி படைத்தனவாக அவை இருக்க வேண்டும்;

(iv) மிகவும் சாதகமான ஆண்டுகளில், 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பின் முன் கார் பயிருக்குப் பாசனமளிக்க நீர் இருந்தால் மேலே (i), (ii), (iii) இனங்களின் கீழ்க் குறிப்பிட்டுள்ள பகுதிகளுடன், மருதூர் அணைக்கட்டுக் கால்வாய்களின் இடப்பக்கத்திலும் வலது பக்கத்திலும் உள்ள பகுதிகளுக்கு மாற்றி மாற்றி நீர் வழங்கப்படும்.

எனவே, பாபநாசம் நீர்த் தேக்கத்தில் இருப்பில் உள்ள நீரின் அளவு, ஏப்ரல் முதல் ஜூன் வரை மேலும் நீர்த் தேக்கத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு, ஏரிகளில் தேக்கப் பட்டுள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் முன் கார் பயிரிடுவதற்கான பரப்பு வரையறுக்கப்படுகிறது. இதற்கு மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலுள்ள நீர் இருப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

1972 ஆம் ஆண்டில், அரசு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமைப் பொறியாளர் (பாசனம்), வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) ஆகியோரைக் கலந்தாலோசித்து திருநெல்வேலி மாவட்டத்தின் தாமிரவருணி நீர்ப்பாசன அமைப்பின்கீழ் 1381 (1972) ஆம் பசலிக்கு 10,800 ஏக்கரில் முன் கார் சாகுபடி செய்ய அனுமதி அளித்தது. அதன் பின்னர், தலைமைப் பொறியாளர் (பாசனம்), கடம்பா நதியின் 11-வது மதகிலிருந்து பாசனம் பெறும் உழவர்கள், தங்களது ஆயக்கட்டுகளையும் முன் கார் சாகுபடியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி முறையிட்டு வந்தனர் என்று தெரிவித்து மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் சேமிப்பு அளவை 1,000 மி.க. அடி குறைத்துக் கொண்டு 1381 (1972) ஆம் பசலியில் கடம்பா ஏரியின் 11-வது மதகிலிருந்து நீர் பெறுகின்ற 12 ஏரிகளைச் சேர்ந்த 5.762 ஏக்கரில் முன் கார் சாகுபடி செய்ய அனுமதி வழங்கலாம் என்று அவர் பரிவுரை செய்தார். அரசு, இப்பரிவுரையை ஏற்றுக் கொண்டு, அதன்படி உத்தரவுகள் பிறப்பித்தது.

இவ்வாறு, 1381 (1972) ஆம் பசலி ஆண்டில் முன் கார் சாகுபடி செய்ய வேண்டிய பரப்பை அரசு முன்னரே நிர்ணயித்து விட்டது. எனவே, அந்த முன் கார் பயிர்கள் நல்ல விளைச்சல் தருவதற்காக, அவற்றிற்குப் பாசன வசதி அளிக்க வேண்டியது அவசியமாகியது.

ஏப்ரலிலும் மே மாதம் 11 ஆம் தேதி வரையிலும் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைந்த அளவே பாபநாசம் நீர்த் தேக்கத்திற்கு நீர் வந்தது. எனவே, 23-4-72 முதல 11-5-1972 வரையில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து குறைந்த அளவாகிய 379 மி.க. அடி நீர் பெறப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிடவே, குறையான கார் சாகுபடியின் கடைசி காலத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டது சேமித்து வைத்திருந்த நீரைக் கொண்டு முறை மாற்று முறையை (Turn system) பின்பற்றியும் விவேகத்துடன் பாசனத்தை முறைப்படுத்தியும் தாமிரவருணி நீர்த் திட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான கார் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன தென்மேற்குப் பருவமழை பொய்த்ததனால்தான் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம வட்டத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டதேயொழிய முன் கார் பயிருக்குத் தண்ணீர் விட்டதனால் அல்ல.

*திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அட்வான்ஸ் கார் சாகுபடிக்குத் தண்ணீர் கொடுப்பதுபற்றி விளக்கம் தந்திருக்கிறார்கள் என்றாலும் சென்ற தடவை தண்ணீர் கொடுப்பது ஜூன் மாதத்திற்கு பின்னும் அட்வான்ஸ் கார் என்ற பெயர் நீட்டிக்கப்பட்டதால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அட்வான்ஸ் கார் என்பதே மின்சாரத்திற்கு உபயோகப்படுத்தும் தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேர்ந்து வீணாகாமல் இருக்கும்பொருட்டு விவசாயத்திற்கு நீர்ப்பாசனத்திற்கு கொடுக்கப்பட்டது. ஆயினும் இப்படி ஜூன் மாதத்திற்குப் பிறகும் தண்ணீர் கொடுப்பதால் மேலே உள்ள பாசனமும் பாதிக்கப்படுகிறது; கீழே உள்ள பாசனமும் பாதிக்கப்படுகிறது. வளர்ச்சி மன்றத்திலும் இதுபற்றிப் பலதடவை சொல்லியிருக்கிறோம். அதிகாரிகள் இந்த நிலைமையைத் தவிர்க்கவில்லை என்றால் விவசாயிகள் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும் என்று நமது சட்ட மன்ற உறுப்பினர் பத்மநாபன் அவர்கள் கூட வேதனையோடு வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வற்புறுத்தி பேசியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.